சிவமயம்

Registered as a Newspaper in Ceylon

P. M. G. NO. H. A 59/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் தேதி சனிப்பிரதோஷம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னேந்தை யினையடி நீழலே.

புத். நூசு] யாழ்ப்பாணம்:—தாரணஷ் கார்த்திசைமீ உசூ ஊ (1944 டிசம்பர்மீ 11 திங்கட்கிழமை) [இல சூஅ

மிஸ்டர் சேர்ச்சில் பேச்சு

"பிரிட்டிஷார் இப்போது கிரீஸில் எடுத்துவரும் நடவடிக்கையை கண்டித்து இன்று காமன்ஸில் பல மத்த விவாதம் நடைபெற்றது. திரு. சர்ச்சில் விவாதத்துக்குப் பதிலளிக்க எழுந்தபோது சபையோர் கை தட்டி ஆரவாரம் செய்தனர். அவர் கூறியதாவது:—

கிரீஸிலும் ஐரோப்பாவின் வேறு பாகங்களிலும் இருக்கும் ஜனநாயகத்தின் நண்பர்களே நிராயுதபாணிகளாக்க நாம் பிரிட்டிஷ் படைகளை உபயோகித்து வருகிறோம் என்பதும் சத்துருவைத் தோற்கடிப்பதில் அபாரமான உதவி செய்து வந்த அந்த அம்சங்களை முறிக்க நாம் முயற்சிக்கிறோம் என்பதும் தான் நம்மீது சாட்டப்பட்ட குற்றமாகும். காமன்ஸ்சபை தீர்ப்புச் செய்யவேண்டிய கோடியான ஒரு பிரச்னை இப்போது எற்பட்டிருக்கிறது.

கிரீஸிலும் ஐரோப்பாவின் வேறு பாகங்களிலுமிருக்கும் ஜனநாயகத்தின் நண்பர்களை நிராயுதபாணிகளாக்க பிரிட்டிஷ் அரசாங்கம் உண்மையில் பிரிட்டிஷ் படைகளை உபயோகத்து வருகிறதால் இந்தச் சபையின் கமபிகளையும் மபமுவமறு அது கொஞ்சமும் அருகதையற்றது, ஆனால ஜனநாயகத்தின நண்பர்கள எனபோர் யார்? அந்த வார்த்தை எவ்வாறு விபாகடாமல செயபபடவேணடும.

எது ஜனநாயகம்?

'ஒரு சாதாரண மனிதனை தனது மனைவி மக்களோடு வாழ்ந்து, தேவையானபோது எனது தேசத்துகாகப போராடித் தான பார்லியெணடுகு தெரிந்தெடுதத்ப விரும்புவதற்கு யாதொரு பயமும பயமுறுத்தலுமினறி வாக்களிக்கவேணடும. சுதந்திரமான சுயேசசையான தேர்தலை நடாகக்கூடிய அதிகாரமகளை நாம ஆதரிதது நிறகிறோம. அந்த ஜனாயகத்தில இடது சாரிகளும கமயூனஸ்டுகளும பாதாரமனறி எலலாக கடசிகளும இருக்கவேணடும.

சுட்டுக் கொல்வது ஜனநாயகமா?

வரவர புரட்சிகரமாகச் சென்றுகொண்டிருக்கும் கட்சி ஜனநாயகக் கட்சியாக இருக்கமுடியாது. இருக்கவேண்டிய அவசியமும் இல்லை. இந்த ஜனநாயகக்கட்சிதான் ஹிம்சை நிறைந்த கட்சியாக மாறி சிறைக்க நகரங்களுக்குள் பிரவேசித்து பொலிஸ் ஸ்டேசனகளைப் பலாத்காரமாகக் கைப்பறறி கம்மகலாம எதிரச்சாதிகார சாரபாந்தனதகிறவு விரும்புகிறது.

ஆசியலில் அசௌகரியம விளைவித்துக்கொண்டிருக்கும ஒவ்வொருவரையும் சுட்டுக்கொலலவது வேறு நாடகமாக முடியாதி. அதிகாரத்தைப் பறபபது எதர்ட்காலை சுட்டுத்தொலைப்பது ஜனநாயகமல்ல, ஆனால் அதறகு முண்டாடது. எனக்கு எந்த நாட்டு மக்களின் மீதும் நமபிக்கையுண்டு. ஆனால் பலாத்காரத்தினால் அதிகாரத்தைக் கைப்பறறிக்கொள்ள விரும்பும கொலைக் கூட்டத்தினர் மீது நமபிகையிலலை. அதனை அடிப்படையாக வைத்துத்தான் நான் இதைக்க விவகாரங்களில் தலையிட்டேன்.'

பர்மிய அரங்கம்

தென்கிழக்கு ஆசிய ராணுவ தலைமைக் காரியாலயத்திலிருந்து இன்று வெளியான அறிக்கை கூறுவதாவது:—

கிழக்கு விமானப்படைக் காரியாலயத்திலிருந்து களமிய வெடிகுண்டு விமானங்கள மாணடலேவரவி மீடாயி பாதையிலிருக்கும மாயமமோ என்ற இடதைத்த தாக்கின. மற்றும் விமானங்கள் கலியவுக்குக் தெனகிழக்கிலுள்ள நிலகவம்பு குண்டு வீசின. சின்வின் பகுதிக்கு பேய்கொணடிருக்கும சதுரு போகுவரதது களுமாக்யப், மாகலே முதலிய இடங்களிலுள்ள விமன ஸ்டேஷங்களை நமது விமானங்களின குணடுவீசுகு கிலக்காயின. தாணடி சென்ற விமானங்கள தருபபி வரவில்லை.

சின்ட்வின் அரங்கத்தில் கலியவுக்கு வடகிழக்கே இரணடுமை தூரத்திலுள்ள ஸ்தலங்களை தி விமானங்கள பலமாகத தாகின, கிழக்காபரிக்க ஆருப்புகள சின்வின்க கடந்தகொலலபி கிழக்குக் கரையில் ஆரமபடுத்தபபடடன.

ஆகான அரங்கத்தில நமது போரவிமானங்கள் மேலும் வெடிகுணடுகளை வீசித்தாகின.

'மத்திய ஐப்பானில் பூமி அதிர்ச்சி'

லண்டன் டிச 8—

மத்திய ஜப்பான் பூமியதிர்ச்சியினால் மேற்று அதிர்ந்ததென்று ரோக்கியோ ரேடியோ ஒலிபரப்புயது.

இத்தப் பூமிபதிர்ச்சியெர்மிவ்வாம் அவதான நிலபதத்தில் முதலில் பதியப்பட்டதாகவும் பிரபல பிரிட்டிஷ் கிபுணர்கள் அதேகமாக ஜப்பானிலும் அலாஷியனிலும் பூமிபதிர்ச்சி ஏற்பட்டிருக்கலாமென்று கூறியதாகவும் ராய்ட்டர் செய்தி கூறுகிறது.

தொழும்பிலும் கல்கத்தாவிலும் இத்தப் பூமியதிர்ச்சி பதிவப்பட்டது.

அபின் வைத்திருந்த பெண்ணுக்கு அபாதம்

100 கிரேயின் அபின வைத்திருந்த ரோசலின தோறு என்னும் ஓர் இளமபெண்ணுக்குக் கொழும்பு கீதிபதி திரு. விகடர் ஈ. ராஜரியர் ரூபா 250 அபாதம் விதித்தார்.

எதிரியின் 70 வயதுள்ள தகப்பனர் அபின நினைவகென்றும் அவருக்காக இப்பெண அபின கொணவருவதாகவும குறித்த பெண்ணின பொருட்டுத் தீரான்றிய வழக்காளர் கூறினார்.

ஹிட்லரைத் தண்டிக்க முடியுமா?

லண்டன் டிச 6—

ஹிட்லரை விசாரணைக்குக் கொண்டுவந்து தண்டிப்பதால், எதிர்கால உலகநிலமை சிறிதாவது மாறுமா? என்று கேட்டதற்கு, 'இல்லை' என்று ஜார்ஜ் பெர்னாடுஷா பதிலளித்தார்.

"அவர்மட்டும் அல்ல; மற்றெல்லாரையுமே விசாரணைக்கொண்டு வரவேண்டும். ஜெர்மானியர்கள் மட்டுந்தான் கொடுமை புரிந்தார்கள் என்று சொல்ல முடியாது" என்றார் ஷா.

ஹிட்லர் ஒருவேளை அபாலந்திலுள்ள டப்ளினில் வைசிராய் மாளிகையுள் அடைக்கலம் புகவும் என்றும் ஷா முடிவு கட்டினார்.

ஸ்பெயினின் பிரிட்டிஷ் ஸ்தானிகர் விலகுவார்

மட்ரிட் டிச 7—

டெம்பள்வூட் பிரபு (முன்பு ஸர் ஸாமுவேல் ஹோர்) காணாடு வருடமாக தாம் பாரத்துவந்த ஸ்தானிகர் பதவியை விட்டுவிலகி அடுத்த வாரம் பிரிட்டனுக்குப்போக உத்தேசித்திருப்பதாக இன்று ராய்ட்டரின கிருபர் கூறினர்.

துலாவிழுந்து மாண்டாள்

யாழ்ப்பாண மரண விசாரணை அதிகாரி மிஸ்டர். எஸ். ஏப். எஸ. ஆண்ணாசமிப்பிள்ளை இணறில வாசிபாகய 20 வயதுகுடைய பாக்கியம் என்னும் பெணணின மரண விசாரணை நடத்தினர்.

அபோது ஓயாத்துரையின மகள சாசுயதி கூறியதாவது:—

"காலகதியனறைத பாக்கியம் எனது சகோதரி, 4-ந் தேதி காலை 9 அலலது 10 மணிளவில தானும் பாககியமும குளிப்பதறகாகக் கிணறறடிகுச் சென்றோம். தான வருதத்காரியாணையால குளிப்பதறகு தணணீர் நிளளாமலுள. ஓர்வாளி தணணீர் அளவித தனது மீதத்தைக் கழுவட்டுமறதாம் தணணீர் அளளுமபோது அசமலகை முறறத்துலை அவளது தலையில் அடிதததில. அடிதததுடனே அறிவு கெட்டு அவள் கீழ விழுந்தாள. நான சததமபோடுவே அயலவர் வந்து கூடினாகள. பினனர் யாழ்ப்பாணம சிவில் ஆஸபதரிக்கு எடுத்துச் சென்றோம. அந்து மரணமானாள:

ஸிவில் ஸேர்விசுக்கு மேலும் 12 பேர்

சமீபத்தில் நடைபெற்ற ஸிவில் ஸேர்விஸ் பரீட்சையில் தேறியவர்களின பெயரகளாவன:—

பி. மஹாதேவா; எஸ். ஜே. டல்பிறற; டி. டி. இ. வ. டி. பொன்சீகா; வி. எம். பீ. ஸ், ஜி. வி. பொனசேகா; கி. வ. கூ. றி; பி. வ. நிலவா; வ. எல. பெரீரா; எ. கிரீதனேலி; எஸ். ஜே. செ. ஜயவகு; வி. ப. அபேசிசார; எ. பொனசேகா;

ஆறுமுக நாவலர் நினைவுவிழாக்கள்

நிகழும் தாரணவருடம் கார்த்திகைமாசம் 21ந் நிகதி புதன்கிழமை (6.12.44) மாலை 5 மணியளவில் மகாகட்சதிரத்தில் சங்கானை அரசடி வைரவகோவிலின் தென்கீழ்த் திசையில் நடைபெற்றவரும் "நல்லூர் நிலய"த்தின் சார்பாக பிரமஸ்ரீ சிதாராமையர் அவர்கள் தலைமையில் ஸ்டிழா நடைபெற்றது. நாவலர் படப்பிரதி ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு அரசடி வைரவ கோவிலில் தாபனமான பின், பல பெரியார்கள் நாவலரைப்பற்றிப் பிரசங்கித்தார்கள். கூட்டம் முடிவுறுமையம் "யாழ்ப்பாணததில் நாவலர் அவர்களின் உருவச்சில ஒன்று அமைத்தல் தமிழர்க்கு முக்கிய கடப்பாடாகும்" எனனும் தீமானம் ஏகமனதாக நிறைவேறறப்பட்டது, இரவு 12 மணியளவில் விழா இனிது நிறைவெய்தியது. கடித.

தும்பளை தெல்லன்கை இலவச வாசிகசாலை மண்டபத்தில 6-12-44 புதனகிழமை இரவு 7 மணியளவில நாவலர் குருபூசை நடைபெற்றது. அத்தருணம் ஷெபூர் திருவாளர் S இராசலிங்கம ஆசிரியர் அவர்கள் நாவலரைப்பற்றிய ஓர் ஆரிய செறபொழிவாறறினர். அதன் மீமல் ஷெ வாசிகசாலைக் காரியதரிசி க. தனிகாசலம மற்றும சில. பிரஜ்சேரந்த முகலியோர் சில கூற ஷெஷ்டா லைவேறறியது.

கிழமை தாரண வருடம் கார்த்திகைத்திங்கள் 21-ம் நாள் 6-12-44 புதனகிழமை பிற்பகல 6 மணியளவில் கோண்டாவில் சைவ இளைஞர் தமிழ்வேத பாராயண சமகத்தாரின் ஆதரவில் ஷெ மண்டபத்தில் நாவலர் பெருமானின் குருபூசைத் தினம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் நாவலர் அவர்களின் திருஉருவப்படம் திறந்து வைத்து விசேடபூசை செய்யப்பட்டது. பினனர் சைவப்பிரசாரகர் உயர்திரு க. வடிவேல சுவாமி அவர்களால் "நாவலரும் சைவமும்" எனனும விஷயம மிகவும உருக்கமாகப் பேசப்பட்டது. பினபு சைவாசிரிய பணடிதர் ச. அப்புகுட்டி அவர்களால் "நாவலர் கட்டியகாரர்" எனனும் பொருள படஇரிவுரைதாணங்களின் சபை யோர் மகிழவுறப பேசப்பட்டது.

பினனர் நிபாரதத்தை செய்யப்பட்டு அங்குக குழுமியிருந்த அன்பரகளுக்கு விநோதப்பரிசுகளுடன் தேறறாண்டி முதலியனவும வழங்கப்பட்டன. காரியகரிசியின் கன்றி பாராட்டலோடு தேவாரம்பாடக் கூட்டமும இனிது முடிந்தது.

—கடித

ரூ 15000 பெறுமதியான ஜவுளிக் களவு

சென்ற புதன்கிழமை இரவு ஆலுதகாரமத்தில வள்ள ஒரு வியாபாரியின வீட்டைக் கள்வர் கன்னமிட்டு ரூபா 15000 மேல பெறுமதியாயுள்ள ஜவுளிகளைத் திருடிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையும் விஞ்ஞானமும்

2-ம் பக்கத் தொடர்ச்சி

றியாப் பொருள்களில் அறிவறற் அற்பமான எலும்புகளைப்போலப் பேதைவாழ்க்கை வாழ்ந்த வர்தார்கள்.

அக்காலத்து மனிதருக்குக் கம் மைச்சுற்றிசுழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் அற்புதமாயும் பயங்கரமாயும் தோன்றின. ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ஒவ்வோர் அற்புதமாகவே அவர்கள் எண்ணிப் பாராட்டிப் பயந்து போற்றிவந்தனர்.

ஒருவேளையில் வானெளியின் கிழோரத்திலேபொன்னிறமாகவிள க்கிய தட்டு ஒன்று, வரவர இடம் மாறி நிறம்மாறிக் குணம்மாறித் தலைக்குமேலே மேலே ஏறிவிடுகிறது, தாங்கமுடியாத குட்டத்தோடு தும், மறுபடியும் இடம்பெயர்ந்து தாழ்ந்து மறைந்துபோவதையும் சொல்லொணாவனத்தோடு அவர்களுக்கு உண்டாகிவந்தன. தலைக்குமேலே விசிறியெறிந்த கல் நிறுத்தியில் விழுவதையும் குளத்திலில் எறிந்தகல் அவ்வாறு மீளாமல் மறைந்து போவதையும் நீர்ப்பரப்பின்மேல் வீசியெறிந்த மரக்கட்டை திரும்ப வாராமலும் தண்ணீரில் மூழ்காமலும் மிதந்து கிடப்பதையுமகண்டு அவர்கள் முதன்முதலில் அடைந்த வியப்பு வகணக்கில்லை. ஆயினும் இவற்றுட் சிலசில, திருமபத்தக ஒரே குகையாய் நடக்கக்கண்டு, அவர்கள் காளடைவில் இந்நிழ்ச்சிகளிலுள்ள சில ஒழுங்குகளை அறிந்து கொண்டார்கள, கல நீருள் மூழ்கும், எட்டை நீரில் மிதக்கும், கட்டையும் கல்லும் அந்தரத்தில் ஆதரமின்றி நிற்கமாட்டா என்பதை அவை மீண்டும் மீண்டும் ஒரே வகையாய் நடக்கும் தனமையைக் கண்டு உணர்ந்த காணத்தினால். அவர்கள் காளடைவில் அநுபவ வாயிலாக அறிந்து கொண்ட விஷயங்கள்.

எனினும் வேற சிற்சில இயற்கைநிகழ்ச்சிகளைப்பற்றி அவர்களுக்கு ஒனும் விளங்கவில்லை. சில நிகழ்ச்சிகள் ஓரிடத்தில் நடப்பதுபோல மற்றோரிடத்தில் நடப்பதில்லை; ஒருசமயம் நடப்பதில்லை. உதாரணமாக மழை பெய்கிறது; பனி செய்வதற்கு முன மேகங்கள் கண்டு சூழ்கின்றன; ஆனல் பேரங்கள் இரண்டு பொழுதெல்லாம் பனி பெய்யக் காணோம்—ஏன்? ஒருநாளைக்காலில் மழை பெய்கிறது. ஒருநாள் மழை பகலில், ஒருநாள் இரவில்—ஏன்? ஒரு சமயம் குளிரைப் பார்க்கிறது. ஒருசமயம் வானமே நீராகிறது. கடல் ஆகாட்டை குமிறிப் பொங்கிறது—ஏன்? ஒருசமயம் கண்ணைப் பறிக்கும் மாதையோடு மின்னல் மின்னுகிறது. காது செவிடுபடும் பனம உச்சமுறப் பிளிறியோடு இடி முழங்குகிறது. அப்போது இருளைமட ஒரு மரம் சடசட வென்று சாய்ந்து விழுகிறது; அல்லது, பச்சைப்பசேலென்றிருந்த மரம் ஒன்று விநாடியில் கருகி உளர்ந்துபட்டை உரிந்து போகிறது; அந்த மரத்தின பச்சைநிறம், ஆதை உயிர், ஆதை பருமன், ஆதை செழுமைபூட்டு, ஆதை வனப்பு இவற்றிலுள்ள மாறுதல் மாகளையாவும் முன்போல வெதை இளந்தளிர்களாக மாறில அலசாதிப் பூதது; மணமும் கனியும் சுவையும் கொண்ட மகழ்ச்சிகின்றன—ஏன்? இந்த இரண்டு வெளிணமும் தலையான வானத்தின் சக்தியை பிரகாசிக்கிறது; உருக்க வர்த்த வெள்ளிபோல் நிலவு பொழிகிறது, அடுத்த பௌர்ணமையன்று அதேநேரத்தில் எங்கும் ஆனக்கயமான சந்திர கிரணங்கள் அதிர்தம்போலப்பொழிந்துகொண்டிருக்கும் நேரத்தில் வானவெளி வரவர இருளுகிறது. சந்திரபிம்பம் சிறிது சிறிதாக மறையத் தொடங்கி, இருக்கும் இடமே தெரியாமல் மறைந்து விடுகிறது. சந்திரோதயம் இலலாத அமாவாசையாகவேபௌர்ணமைமாறிவிட்டதுபோலத்தோன்றுகிறது. மீண்டும் சிறிதுநேரத்தில் 'உலகத்துக்கு என்ன நேடு வந்துவிட்டது? நாம் என்ன தீங்கு செய்தோம்?' என்று மக்கள் தயங்கித் தவிக்கும் வேளையில் வரவர இருள் நீங்கிச் சுதந்திரபிம்பம் முன்போல தோன்றி நிலவளிக்கிறது—ஏன்? இக்காலத்திலே வாழ்ந்து வந்த மக்கள இந்நிழ்ச்சிகளில் யாதொரு ஒழுங்கையும் காண இயலாமல் திகைப்படைந்தார்கள். அறியாமை மிகுந்திருந்த அக்காலத்தை ஆஞ்ஞானயுகம் என்று சொல்லலாம் அல்லவா?

ஆயினும், மனிதன் அறிவு படைத்தவன், ஆராய்ந்திறம் உடையவன். ஆகவால் இவ்வாறு முரண்படும் இயற்கைநிகழ்ச்சிகளை அவன் அறிய முயன்றான். பலவகையாய் யோசித்துப் பார்த்தான். மழையும், மின்னலும், இடியும், சந்திரனும் என் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு மாதிரியாக நடக்கின்றன என்று ஆலோசித்து இவற்றின் உண்மையைத் தெரிந்துகொள்ள முயன்றான். 'என் இவை இவ்வாறு நடக்கக்கூடாது? நாமும் இவ்வாறு தானே நடக்கிறோம் ஒருநாள் நாம காலையில விழிததுக் கொள்ளுகிறோம்; மற்றொருநாள் தூங்குகிறோம்; நம்முடைய இஷ்டப்படி இந்தமாதத்தையோ அந்தமாதத்தையோ வேட்டுகிறோம்; ஒருசமயம் உரக்கப் பேசுகிறோம்; ஒருசமயம மெதுவாகப் பேசுகிறோம்; ஒருசமயம் விட்டுமனதில் ஒதுங்குகிறோம்; ஒருசமயம் வெளியில் வந்து உலவுகிறோம். நம் நம்முடைய இஷ்டம்போல் இவ்வாறு நடப்பதைப்போலவே, மேகமும், மழையும், சந்திரனும் தம் இஷ்டம்போல் நடக்கின்றன. இவ்வாறுதான இது இருக்கவேண்டும்' என்று முடிவு கட்டினான். ஆதலால் இவற்றையெல்லாம் உயிரைக் கற்பித்தான். இவை எல்லாம் தெய்வங்களாகவோ அல்லது தெய்வத்தினால் ஏவப்பட்ட தேவதைகளாகவோ பாவித்தான், இவைகளுக்கு நல்லமனதை யும்கெட்டமனதையும் கொடுத்தான், தான் எவ்வாறு—தனமனம் போன வாறெல்லாம் — நடக்கிறோமோ அவ்வாறே இவையும் யாதொருகி திக்கமும் ஒழுங்குக்கும் உட்பட்டது, தம் மூடைய மனம் போனவாறல்லாம் —விருப்பு வெறுப்புகளுக்கும், சோபாபாபங்களுக்கும், மாறைய மனநிலைகளுக்கும் உளாகி—நடப்பவைகளாகவே கற்பித்துக்கொண்டான். ஆதலால், பழங்காலத்திலே ஒவ்வொரு இயறகைப் பொருளும் ஒவ்வொரு நிழச்சிக்கும் சீரற்றதற்கும் ஆதிமூலகாணமாகவும் தெய்வங்கள் மனதிலே சிருஷ்டிக்கப்பட்டன. மழையும், வெயிலும், காற்றும், நெருப்பும், கல்லும், மண்ணும், மலையும் செயல்களாயின. சூரியனும் சந்திரனும் ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு பெயர்களோடு தேவதைகளாக விளங்கிவந்தன. ஆலில, கலப்பற்ற உண்மையோடு அவர்களை வளர்க்கவில்லை. உதாரணமாக, கிரேக்க தெய்வங்களை எடுத்துக்கொண்டால் அவர்களுடைய தெய்வத்தினை மனிதத் தனமையாகவே வரித்து முடிந்தது. இதனால் வேஷங்களில் மாறுபாடும் மாசுபடற்ற பழந்தெய்வ அறிவும் உடைய மனிதத் தலைவர்களும் யுடையவர்களாகவே அவர்கள் கற்பிக்கப்பட்டார்கள். மனித சமூகத்தின் நன்மையை நாடி, இக்காலத்தில் மனிதர் மனிதர்மீது பிரயோகிக்கும் சட்டநிட்டங்களையும் தண்டனைகளையும் இதேக்க தெயவங்களின் மீது நாம் பிரயோகிப்பதாயிருந்தால், அவர்கள் எல்லாருக்கும் அதேகமாகத் தூக்குத் தண்டனையும், தீவாந்தர சிட்சையுமே தண்டனைகளாக இடவேண்டிவரும். மற்றையகாட்டுத் தெய்வங்களின் கிலைமைகளும் பெரும்பாலும் இவ்வாறே. இவ்வாறு அரைகுறையாய் அறிந்த விஷயங்களைக் கற்பனைக் கண்களாற் பார்த்து அவற்றைக் குவித்துப் பலவகையாக எண்ணங்களை கரைண்டு கீண்டகாலத்தை அபிப்பிராயபுகம என்ற சொல்லலாம்,

இப்படி வெகுகாலம் சென்ற பிறகுதான இயற்கை நிழச்சி ஒவ்வொன்றுக்கும ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்பது தெரிய வந்தது. சிறிது சிறிதாகத் திலலை திலலையாக அறிஞர்கள் ஊறிக் கசிந்து வந்தார். அவர்கள் தொகுத்த காளத்திலை, ஆராய்ச்சித் திறமை மிகமிக்காரணமாயிருந்தது. இயறகை யில் யாதொரு செயலும் கப்பதில்லை என்பதை மனிதர் உணரலா யினர். இந்நினைவு காணகாரிபத் தொடர்பு என்னும் இயறகைவிதி ஒன்றை அவர்கள் தெரிந்துகொண்டார்கள். தாம் கடவியங்களை கவனித்தார்கள்; ஒழுங்குபடுதது அவறறைக் குறித்துக்கொண்டார்கள் மேன்மேலும் அவறறைப்பற்றி 'ஏன்? எப்படி? எனல்?' என தெலலாம்சிந்தித்தார்கள். சோதனை செய்தார்கள். இயறகையில் நடக்கும் நிகழ்ச்சிகளோடு ஒன்ற பல வறறைத் தாமும் நிகழ்த்தினார்கள்; இயறகையில் காணும் பொருளை த்தொருளைத் தாமும் ஆறறினார்; இயறகையில் இலலாப் புதுப் பொருள்களையும் காளடைவில் இயறறத் துணிந்தார் கள்; அறிவும் திறமையும் மேன் மேலும் கிரப்பின; விஞ்ஞானயுகம் தோன்றிவிட்டது.

ஆயினும், நம்முள் பலர் அதன் வருகையை இனனும் முழுதும் உணரவில்லையென்றே தோன்று கிறது; இதற்கு ஒரு காரணம் உண்டு; அதை ஓர் உதாரணத் தால் தெளிவாகலாம்; கடலிலுள்ள மீன் வாழும் மீன்கள் தம்மைச் சுற்றியுள்ள தண்ணீர்ச் செறிவை உணருவதில்லை. அதைப்போலவே, காமும் குறைந்த நூறுமைல் ஆழமுள்ள வாயுக்கடலின் அடிப் புறதேவாழ்கிறோமாயினும், நம் மைசுழ்ந்துள்ள வாயுசெறிவை உணருவதில்லை. வாயுமண்டலம் இலலாவிடில் நாமால் உயிர்வாழ முடியாது. ஆயினும் இந்த நிலைமையிலும் அதன் உணர்வை நாம சாதாரணமாக உணருவதேயில்லை, சற்றில வேளைகளில் கடற்காயிற் குளிர்ந்த தென்னகாற்றாயில் வீசுகறது, மெல்லென விசுகிறது, மலக்கடலின் பரபபில் வெளிக்கிடக்கிடந்த அலன் தாவிக் குதித்து இசையோடு கர்தனை செய்கறது. மெல்லிய உடலை யுடைய தென்ன ரங்கள் தமது மரகதக்கைகளாற் டலைகளான ஆடையங்களை படிதது கடனமா கின்றன. ஆ! என்ன ஆனந்த! தென்றலின இனிமைக்கு ஈடுண்டோ! எனது அமைதிக்கு மாக வெதனறலக மாண்டுகிறது. வேறுசில வேளைகளில புறகாற்று நெடுதது மீளாமசல் மேற்படுகிறது. கொந்தளிக்கும் கடல இடி வைபோல முழங்குகிறது; ஆயிரமாயிரமான டாம்புகள் மோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலித்தொகை மகாநாடு

கொழும்புத் தமிழ்க்கழக ஆதரவில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தே, சென்ற 3-12-44 ஞாயிற்றக்கிழமை மேற்படி மாகாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவாளர் க. சு. அருணாசலம் M. Sc. அவர்கள் தலைமை வகித்தார். இலங்கைச் சர்வகலாசாலை விரிவுரையாளர் திரு. வி. செல்வராயசம் M. A, கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் திரு. சா. பொ. நாதகினம் B. O. L, திக்கம் திரு. சி. செல்லையாபிள்ளை சென்ற. போசேப் கல்லூரி விரிவுரையாளர் திரு. சி. இலக்குமணையர் B. A. வித்தியாரதேர்த் தமிழ்ப்பாடநூல் பொழிபெயர்ப்பாளர் திரு. மு. கணபதிபிள்ளை என்போர் முறையே பரதை, குறிஞ்சி, மருதம், முலலை, நெய்தல் எனனவறறைப்பறறிச் சொற் பொழிவுகளாற்றினர்.

மேற்படிநகழக ஆதரவில் 'தமிழ் எழுத்தாளர் மகாநாடு' விரைவில நடைபெறும். அங்கத்தவர்களாக விரும்புபவர்கள் தம் பெயர் விலாசங்களைக் காரியதரிசிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

—கழக

வடமராட்சி ஐந்திய மோட்டார் சேவைச்சங்கம்

மேற்கறிய சங்கத்தின் ஓர் பொதுக்கூட்டம் 1944 ஆண்டு டிசெம்பர் 16-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிபளவில் பருத்தித்துறை ஆக்கியடி இந்துவாலிபர்சங்க மண்டபத்தில் நடைபெறுமெனவும் அத்தருணம் மேற்படி சங்கத்தின் உத்தியோகத்தர்களைத் தெரிதலும் தற்போழுது பருத்தித்துறை-யழ்ப்பாணம் பல கொம்பனி மோட்டார் சேவை புரியும் பல இடங்களுக்கும் வேறு சில இடங்களுக்கும் மேற டிசகம்பர்சென்ற செபேலகற்காக கொம்மிஷனருக்கு (Commissioner of Motor Transport) மனுச் செயதலும் வேற விஷயங்களைத் தீர்மானித்தலும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. கழக.

கர்பஸ்திரி ஆரோக்கிய சாலை தாபிதம்

பிறறிக்கலை நகாதார சங்கத்தின் வேண்டுகோட்கு இணங்கி, அவ்வூர் திரு. எஸ். வ டி. சில்வா அவர்கள் மேற்படி ஆரோக்கிய சாலை ஒன்று கட்டுவதற்கு இருபதினாயிரம்ரூபா கொடுக்கச் சம்மதமென்று, நகாதார பரிசோதகர் திரு சி. சண்முகம்பிளளை மூலம சுகாதார சேவைக்கு அறிவித்திருக்கின்றாரம்.

கெபூர்து சீமைவதைப்பற் சீறுகிறது. மலைபோலக் எழுமிய அலைகள சீறறத்தோடு கரையின்மேல் மோதிப் புடைதது அநத தூளதூளாகுகின்றன; பாறைகள் இடிதது நுறுக்கி தகர்கின்றன. கரை மீராரத்திலுள்ள தென்னைகள் தலைவிரித்தாலமாக ஆடி, அலறிப் புடைத்துக் கமைமேல் விழுகின்றன. அதனாலே பகலும் இரவும் வெறித்த ஓலம் இவ்வாறே. (வரும்)

—செ தமிழ்

கடவுளின் சர்வ கிர்த்திருத்துவம்

(குகதாசர் ச. சபாரத்தின முதலியார் எழுதிய கட்டுரை)

சர்வகிர்த்திருத்துவமாவது அகில சராசரங்களிடத்துக் காணப்படும் இயக்க மனத்துக்கும் காரணமாகும் தன்மை. கடவுளைத் தவிர மற்றைப்பொருள்களெல்லாம் பரதந்திரமுடையனவாய் அக்கடவுளைப் பற்றக்கோடாகக் கொண்டு விளங்குவனவாதலின அப்பொருளகளிடத்திலே கடவுளையின்றித் தாமாகத் தனித்தியங்கும் வண்மை ஒரு சிறிதாவது கேட்கப்படுவது கூடாது. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்னும் முதுமொழியும் இவ்வுண்மையை வற்புறுத்தல். இயல்பிலே பொருள் நிலையிற் பொருளாகிய இருவகைப் பிரபஞ்சங்களும் கடவுள இயங்கினாலன்றி இயங்கும் வண்மையிலவாதலின, ஆறறிவுகட் காணப்படும செயல்களுக்கும் ஆதீர காரணனாவது தெறலெனப் போதரும். ஆகவே சர்வசுதந்தியங்களுக்கும் ஆதீரே மூலகாரண னென்றபடியாம். எனவே, ஆதீர் சர்வசுதந்திருத்துவமுடையனெனபது கன்றாகாட்டப்படும.

கடவுளின்றித் தானாகவே தனித்தியங்கும் ஆற்றலுடைய பொருள யாதொன்றுளதாமாயின் அதுப் பொருள சுவதந்திரமுடையதோர் பொருளெனப்படுதலவேண்டும். சுவதந்திரமுடையயாதொரு பொருளினுகணேனும், கடவுளுடைய அதிகாரம செலவது கூடாதாகலின ஆதீர் எப்பொருட்கும இறைவராவது செலலாது. அதுவாதலாலன்றிச் சுவதந்திரமுடைய பொருளகள பலவுளவெனப்பட்டு அதீகச்சார வாதமுமாகும். கடவுளாருவதீரே சுவதந்தரமுடையவராதலாலும ஆவரைத அவிர்த்து வேறை பொருளகளெலலாம அவரைப பறறுக்கீராடாகக் கொணடுளள பரதந்திரப் பொருளகளாதலாலும, அங்ஙனம கடவுளைப பறறுக்கோடாகக் கொணடுளள பொருளகள கடவுள இயங்கினாலன்றி இயகமாட்டாவாதலாலும, அந்தப பொருளகளிடத்துக காணப்படும செயல நிகழ்ச்சியிலை முழுதுந தெழிவு விளங்கும நிற்கீராதத்தைப படிமுறைபாக ஒழிதறற பொருட்டே யாதலின, அந்தத் தறபோதம நீச்சயமில நாமிடத்து அதனைக் கணடிப்பது கடவுளுடைய திருவருள் முறைமையாமனக. இதுதற்பாதத்தைக் கிளாத்து வாதும கடவுளையனறேனின, கடவுள அங்ஙனம கிளர்ந்தவதீலாம அவாகளுடைய தகுதிபறறியேயாதலின, அந்தத் தகுதியை அவர்களுடைய தறபோதநிலைக்கடவுள வளர்த்தலுக்குக் காரணமாமனறு அறிக.

விஷயம் கூர்ந்த விவேகங்கொண்டு நுணிதாக ஆய்ந்தறியத்தக்கது. கடவுள் ஆன்மாக்களை யெல்லாம் இயக்குவது அந்த ஆன்மாக்களிடத்தே தனித்தியங்கும் வண்மை பின்மை பற்றியதே. இனி அவர்களைப் புண்ணியவழியிலும் பாவவழியிலும் இயக்குவது அவரவர் தகுதியளவாகவாம். இத்தத்தகுதி இவர்களைப் பந்தித்துள்ள ஆணவத்தளவாகவும இவர்கள முன்செய்த கன்மத்தளவாகவும் இவர்களபால் அமைந்திடுமென்க. இவர்கள் பாவமும புணணியமுமாகிய இருவினைகளையும புரிந்து, இவற்றின் பயன்களை அனுபவித்து, அவ்வனுபவம் வாயிலாக உண்மையைக் கண்டு கடைத்தேறவேணடுமாதலின், கடவுள் இவர்களை அவரவர் தகுதிபள வாக இயக்குவரெனக.

இம்மை உண்மையாயினும், கடவுளால் ஏவபபட்டே ஆன்மாக்கள் ஒவ்வொரு செயலையுஞ செய்வதணடெனின, அவர்களை அத்தச் செயற்பொருட்டாகக் கடவுள் தண்டிததல் முறையாகுமோ வெனின் இவர்கள் தண்டம் பெறுவதெலலாம், தமமிடத்தே நிகழும் செயலகளைத தமது செயலலெனறு மகாள வதுபற்றியேயாம், தமது செயலகடவுள் செயலனறித் தமது செயலனறெனக் கணதலில இவர்கள உணரவலலவராவரோ, அதற்குணததிலேயே அவர்களுக்கு அளவபெருட்டு அளிகபபடுந் தணடமும ஒழிந்துவிடுமெனக. தமது செயலலலாததைத் தமது செயலெனறு இவர்கள மயகனராயினும, இயமயக்கமபற்றி அவர்களைத தணடிப்பது முறையாமோ வெனின, இவர்களைத தணடிப்பதெலலாம இவர்களிடத்துக காணப்படுமசெயல நிகழச்சியிலை முழுதுந தெழிவு விளங்கும நிற்கீராததைப படிமுறைபாக ஒழிதறபொருட்டே யாதலின, அந்தத் தறபோதம நீச்சயமில நாமிடத்து அதனைக் கணடிப்பது கடவுளுடைய திருவருள் முறைமையாமனக. இதுதற்பாதத்தைக் கிளாத்துவாதும கடவுளையனறேனின, கடவுள அங்ஙனம கிளர்ந்தவதீலாம அவாகளுடைய தகுதிபறறியேயாதலின, அந்தத் தகுதியை அவர்களுடைய தறபோதநிலைக்கடவுள வளர்த்தலுக்குக் காரணமாமனறு அறிக.

பிரசங்கம்

நிகழும் தாரண வருஷம் கார்த்திகை மாதம 17உ (2-12-44) சனிக்கிழமை மாலை 7 மணிக்கு சுராபததை அம்மன் கோவிலில கூடிய கூட்டத்தில் பாமேசுவரக் கல்லூரி ஆசிரியர் திருவாளர் மு. ஞானப்பிரகாசம B. A, B. Sc, அவர்கள் "ஓர்தற்கண்" எனனும் பொருளபற்றி உணர்ச்சி ததும்ப ஓர இனிய பிரசங்கம் செழ்ததனர்.

ஆசிரியர் ச. பொன்னுத்துரை ஒரு முன்னுரை கூறினர். திருவாளர் இ. இன்னடதம்பி ரன்றியுரை கூற, தேவாபாரயணத்துடன கூட்டம நிறைவெய்தியது. பிரசங்கத்தது கதது முன்னும பின்னும திருவாளாகள த. சுவரிவகம, மு. குணசேகரன மீவரா திருவாசக பாராயணகளைச் சுபையரையை மகிழவித்தாகள்.

—கை. தம்

சாணத்தில் அறுகம்பல்லக்குத்திப் பிள்ளோபாரகப் பாவித்து வணங்குகல்

பிரமஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

பசுக்களின் உறப்புக்களுள் பிரமவிஷ்ணுக்கள் கொம்புகளின் அடியிலும், கோரவரி முதலிய புண்ணிய தீர்த்தங்களும் சாசர உயிர்வர்க்கங்களும் கொம்புகளின் நுனியிலும், நேன்மை தங்கிய சிரசிலே சிவபெருமானும், நெற்றி நடுவிலே சிவசக்தியும், மூக்குநுனியிற் சுகக் கடவுளும், மூக்கினுள்ளே விக்கினராதாரும், இரண்டு கன்னங்களின் நடுவே அசுவினி தேவரும், இரு கண்களிலுப் சூரிபசந்திரர்களும், பற்களிலே வாயுதேவனும், நெஞ்சிலே சரஸ்வதியும், மணித்தலத்திலே யமனும், இயக்கர்களும், குளம்பு நுனியிலே சர்ப்பங்களும், சந்தகோடறும் அட்டவசக்களும், அரையிலே பிதிர்தேவர்களும், வாலின் மயிரிலே ஆகாயகங்கையும், குதத்திலே இலக்குமி தேவியும், கோசலத்திலே ஆகாயகங்கையும், சாணத்திலே யமுனாநதியும், உரோமங்களிலே மகாமுனிவர்களும், எல்லா அங்கங்களிலும் கலங்காநிலபுடைய கற்பாஸ்திரீகளும் பொருந்தியிருப்பாகள.

இவற்றைச் சிவபெருமானே ஆன்மாக்களது பூசாகருமமுதலிய வற்றின் பொருட்டுப் பூமியிலே உற்பத்தியாகுமபடி கற்பித்தமையால அவை ஆதியிலே பாற்கடலின வழியாய்த் தோன்றிப் பூவுலகத்திலே விளங்குகின்றன.

பசுக்கள் மேற்கூறியவற்றின் மாத்திரமன்றி, இன்னும் அனேக வகைகளிலுமும விசேஷமுடையன; தருமதேவதையின் சொரூபமாகலாலும், தானப்பொருள்களில் பிரதானம பசுவாகலானும் எனக.

மைதாநதியைக் கடப்பிப்பதும் பசுவே, தேவர்கட்கு உண்டி வழங்குவதும் "காமதேனு" எனனும் பசுவே. காமதேனு விருப்பியதைக் கொடுப்பது. ஆசிரியர் தொல்காப்பிபனரும் வேள்வி இலக்கணநூலாரும் அறுவகை வர்ழத்தி பொருள்களில பசுவையே ஒன்றாக வைத்தனரன்றி வேறு மிருகங்கள் ஒனறையும வகுத்தோதினாரிலர். விசாரசருமநாயனாரும் ஆனாயராயனாரும் மேலாகிய பதவியை அந்தக் காலத்தில அடைந்ததும பசுவினாலனறோ.

ஸ்ரீ கண்ணபிரான் இடையர் அவற்றினபின் நிரந்த மேய்த்தது எதனைக் குறித்ததோ? கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்தது எதற்கு? எங்கே படுத்துக் கொண்டனர்? பாற்கடலிலனறோ! கோவிந்தன் என்ற பெயர் கண்ணபிரானுக்கு எதனால் கிடைத்தது? அப்பசுக்களினாலனறோ! வைஷ்ணவர்கள் சுபாசுபகாலங்களில் எந்த எந்த நாமத்தைக் கூறுகின்றார்? கோவிந்தநாம சகஸ்ரநாமமல்லவா! வைஷ்ணவர் சைவரென்னும் இருபாலாரும் பிரார்தநம, நிட்சை, யாகம, விரதம, விவாகம, கிருஹப்பிரவேசம, அந்தியேஷ்டி முதலிய சடங்குகள் எந்த மிருகத்தின பொருள்களைக்கொண்டு செய்கின்றனர்? அப்பசுக்களின் பொருள்களாலனறோ! ஸ்ரீ கண்ணபிரானுக்கு அபிஷேகஞ் செய்பவர்கள் பசுக்களின ஐந்து பொருள்களைக்கொணடே செயகின்றார்கள். எவ்வளவுபட்ட துக்கமும் இச்சாணத்தால் ஒழியும; எவ்விதத் தோஷங்களும் இதனால நீங்குகின்றன. உடை எரிசலும இதனால் மாறுபடுகின்றது. இராமனுசரும் மைசூரிலுள்ளவரும் ஒரு வைணவருக்குச் சோழநாட்டிச் சாணத்தாலுச் சிட்டமகற்றிய சரித்திரமும் வைணவசிரோமணிகளை குருபரம்பரை என்ற நூலின்கண் விரிவாய்க் கண்டுகொள்ளலாம். ஆயுள்வேதவைத்தியர்களும் பல மருந்துகளை இச் சாணவராட்டிகொண்டு புடமிடுகின்றனர். இதனிடத்து யமுனை நதியிருக்கிறதென்று சந்தான முதலிய சாஸ்திரங்கள் கூறுகின்றன. சாணவராட்டிகொண்டசமைத்தவுணவு சுத்தமாயும், நோய்களைத் தீர்க்கும மருந்தாயு மிருக்குமென்பர். வீர மணடலபுரம் புண்ணியசாத்தமென்றும். அங்கே சத்துவசாஸ்திரிகள இச் சாணத்திலே விசேஷித்த ஒரு பெரிய சக்தி உளதெனக கூறுவதாகவும், நுணவசேஷமுளள சாணம மந்திரபலத்தால் எதனுங் குணங்களைத்தான் செய்யாது.

இவ்வித மகத்துவம் பொருந்திய சாணத்தை இவ்வாகாரமாகச் செய்து அதன்மேல் அறுகம்புல்லைக் குத்துதல் சுத்த சைதன்னியமாகிய ஆனந்தம்பெருகுதற்காம்; பாற்சமுத்திரத்திலிதேவர்மிதந்தாடுகையாலும், அமுதமபுல்லுண்ணுஞ் சில மூலிகைகளா தோன்றியதென்பர். அமுதம்பட்டோ, விலவம், வளசி, இருவுளமீவர், கருகு, பச்சை முதலிய தாவர ஜாதிகளால அருச்சித்தவர்கள் பேரானந்த மோட்சங்களை அடைபவர்கள்.

அறுகம்புல்லாலஅர்ச்சிபபவர்கள் மனதில் நினைத்த கருமங்களைப் பெறுவர்களென்பர்கள் என்பது நூதனமுணிபு.

முன்னொருகாலத்திலே தேவர்களுக்கு இடையூறு செய்துவந்த கொடியவனாகிய அருணன் என்னும் அசுரனை விநாயகர் ஓர் பிரமசாரி வடிவமாகச் சென்று யுத்தஞ் செய்து அவனுடையதிருப்பு அவனை ஓர் மெல்லிகராபளவு ஆகும்படி செய்து விழுங்கிவிட்டார். அவனுருவம் சிறுகாலனையுடன விநாயகரது சரீரத்தில கொதிபுண்டாய வருந்த தேவர்கள பால, தயிர, கருபபு, தேன, இளநீர, பஞ்சாமிர்த முதலியவற்றால் சிதாபசாரங்களை செயதும அடங்கவில்லை. கடைசியாக அருகம்புல்லைக்கொண்டுவந்து தடவினார்கள. உடனே குளிர்ந்து சுகமாயிருக்க அவர்களுக்கு வேண்டிய சிந்தனைகளைக் கொடுத்தார, ஆதலால விநாயகரை அருசசிபபதற்கு அறுகம்புல்லை சிறந்தது பிறகு எனபதாம. அறுகம்புல்லை கையிலெடுத்து அருசசிபபதனால ராம நினைத்த கருமம கைகூடுவதுடன மதுசரீரத்தினிலுகும உஷ்ணத்தாலுண்டாம துனபங்களை நீக்கித தேக ஆரோக்கியமுமுண்டாகும். அறுகமபுலலும ஆயுத்திமுதலிய பெயர்பெறுவதும பழமொழி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு-நாடகமே உலகம்

திரு. சி. அருளம்பலம்

கண்ணாம்பூச்சி ஆட்டம் என்பது சிறுவர்கள்கூடிக் கண்பொத்திவிளையாடும்ஒருகுதூகலவிளையாட்டு. இக் கண்ணாம்பூச்சி யாட்டத்தைச் சிறு வயதில் ஆடியும் பார்த்தும் மகிழ்ந்த எனக்கு இதைப் பிரபஞ்சமே ஒரு கண்ணாம்பூச்சியாட்டமாகத் தோன்றுவதில்லை. 'நாடகமே உலகம் நாளை நடப்பதை யாரறிவார்-ஒரு (நாடகமே) என்ற பாட்டும், 'மாயப் பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை' என்ற பாட்டும் மாறி மாறி என் மனத்தையே வந்து தட்டுப்பட்டுக்கொண்டே இருக்கும். குழந்தைகள் விளையாடும் கண்ணாம்பூச்சி ஆட்டத்திற்கு பேராசிரியர் தொல்காப்பியர் பிரபஞ்ச ஆட்டம்,

ஒருவன கண்ணைக்கட்டிப் பலர் கண்ணைத் திறந்துகொண்டு விளையாடும் பிள்ளைகள் விளையாட்டு கிறகு எல்லாருடைய கண்களையும் கட்டி ஒருவன் தான்மாத்திரம் விழித்துநின்று என்னைப் பிடியுங்கள் என்று சொல்லுவதுபோல் இருக்கின்றது எங்களபடன்ன நிருஷ்டாட்டு. எனவே ஆசிரியரும் எல்லாரையும் கட்டவுமல்ல, தான மறைந்து நிற்கவுமல்ல. அங்கிங்கெனாதபடி எங்கும பிரகாசமாய் ஆனந்த சூரியனாகவே நின்று எல்லோரையும் மாயை என்னும் திரையை விலக்கி ஒளியும், நிழலும், மனதிலும், மாமரத்திலும் எங்கும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை கண்டு களிக்கும்படி செய்கிறார்.

கைகட்டச்சியின் கண்ணுக்குச் சூரியன் ஒளி மிகவாரு வாறும்போல், ஆவிலைமன்ன ஞானசாரும்ப பரசாசம், மாயாமல் மதத்தலைநின்று நிறைமனம் கண்ணுக்குத் தெரிவதுபோலவும் இறைவனின் இயல்புதானே! பக்தரான மேன்மக்கள் இவ்வாறு மறைந்து நின்ற ஒருவனை தேடுவார்கள் பக்திரசப் பாடல்களைப் பாடுவார்கள். கண்களை மூடி உள்ளுக்குள்ளே ஞானக்கண்ணால் பரமனைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுவார்கள்.

அப்பர் சுவாமிகள் ஆண்டவன் மறைந்துநின்ற இடத்தைச் சுட்டிக் காண்பித்துள்ளார். மறைந்து நின்றுள்ள ஈசனை மறைவை விட்டு வெளிப்படுத்தும் வகையையும் உபதேசித்துள்ளார்.

"பிறவறியாவினை பாலிற் படுநெய் போல்
மறையுளை முன்மாமணிச் சோதியான்
உறவுகோலட்டி உணர்வுக் கயிறமிலை
முறுகவாங்கு கடைபுமுன் நிற்குமே"

என்கிறார்.

"உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்' என்றார் ஒரு பெரியார். ஆண்டவனைச் சாதாரண ஊனக் கண்ணால் வெளியே பார்க்க முடியாது. ரூபம்பந சிருஷ்டியில் ஒளிமுய விளங்கும் பரவஸ்து புறக்கண்களிற் புலப்படாது. இவ்வுண்மையினையே நம மணிவாசகப்பெருமானும்,

"வெளிவந்த மாலயனும் காண்டரிய
விதனகனை
.....பாடுதுங் காண்மினோ"

என்று வெளிப்பட்டான.

சிறுவர்கள் ஆடும் கண்ணாம்பூச்சி விளையாட்டிலே குருடன்போல ஓடமறப்பதுபோற்றிச் சுற்றித் தடவுபவர் பலரில் ஒருவனைப் பிடித்துக்கொள்கிறோம். மாயா உலகப் பிரபஞ்ச ஆட்டத்திலே தேடித தேடிக களைத்த தேவனே வெளிக்கண்களை மூடி உள்முகமாகும் தியானத்தால் உணர்ச்சி என்னும் கண்ணைத் திறந்து அகமுகமாகப் பார்த்து ஒருவனைப் பிடித்துக்கொள்ளுகிறோம். அகப்பட்டால் உலகமில்லாமல் ஆகிவிடுகிறது. "ஆனந்த மித்தவது வனே இருந்த ஆட்டத்தில் கண்டுபிடிப்பதன்றித் தேடக் காரணமில்லை" என்பதை

"வான்தேடும் மறைபோலே?
மறைத்தகம் பொருளேபோல்?
ஊன்தேடும் உயிரேபோல்? உயிர்
தேடும் உணர்வேபோல்?
தான்தேடச் சகமெலாம் உடன்தே-
ரான்தேடி யான்காண வாராரோ?
காணாரோ!"

என்று அறிவுறுத்துகின்றார். அப்பர்சுவாமிகளும் 'தேடிக்காணுகவணதுளை ஊனறி வதிலாதனை" எனவும்,

"தேடிக்கண்டு கொண்டேன் திருமாலோடு கல் முகளுமை
தேடித் தேடொணாத் தேவனை
எனதுள்ளம
தேடிக் கண்டு கொண்டேன்"

மகானைகளாகிய சித்தர்கள் பாடுவதும் இதுவே,

"என்னகத்துள் என்னையான்
எங்கும் ஓடித்தேடிநின்
என்னகத்துள் எனையறியா
தலமைந ஆனதால்
எனைகத்துள் எண்ணோடாள்
அறநன்மையம் தெளிந்தபின்
எனைகத்துள் எனையறி
வேறு ஓணமும் கண்டிலேன்."

"ஊர்ஸ்தாவர ஜங்கமமாயும்
ஞானமயமாயிருந்த"

பாரேந்தாலும் ஆகப்போய்! நீ
ஆடி அசையாதே!"

சிவவாக்கியரும் இதே தத்துவத்தைப் பின்வரும் பாட்டில் உபதேசிக்கிறார்,

"அகார காரணத்திலே ஆனேக
னேக ரூபமாய்,
உகார காரணத்திலே உருத்தரித்து
நின்றனன்
மகாரகாரணத்திலே மயங்குகின்ற
வையகம்
சிகார காரணத்திலே தெளிந்ததே
சிவாயவே"

இன்னுமோர் பெரியார்,

"சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினைமாளும்
சிவசிவ வென்றிடத் தேவருமாவர்
சிவசிவ வென்னச் சிவகதிதானே"

"அன்புஞ் சிவமும் இரண்டென்ப
தறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே"

என்று முழங்குகிறார். ஸ்ரீ கண்ணபிரான் சோபிகா ஸ்திரீகளுடன் கண்ணாம்பூச்சி ஆடினானென்பர். அதற்கு ராஸலீலா என்ற பெயர். ஆட்டமுடிவில் அவரவர் கைக்கு அகப்பட்ட பொருளை அவரவர் எடுத்துக்கொண்டு போவது என்று முடிவு கட்டினார்களாம். கண்ணன எதிர்த்துப் போகும்போது ஒரு புடைவையும், சோமனும், ஒரு குழலும், ஒருதோடும் அகப்பட்டதாம். இதனைப்போலும் ராஜமன்னர் குடிஜனங்களிடத்தில், திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவர் போல, ஒரு புறம் சோமனும், ஒரு புறம் புடைவையும், ஒருபுறம குழலும், ஒரு புறம் தோடும தரித்து விளையாடராஜசிகாமணியும் விளங்குவரென்பர்,

குழந்தைகளின் கண்ணாம்பூச்சி ஆட்டத்தில் ஒருவன் ஆட ஆரம்பித்து, சிருஷ்டி எனனும் கண்ணாம்பூச்சி ஆட்டத்தில் ஈடுபட்டவனும் உலகெலாம நிறைந்த ஒருவனை பிடிக்கத் தொடங்கிய முத்தி என்னும, பரம எனறும, பதம் என்னும கூறப்படும். அத்தகையவன் யாவன்? —ஈசன்.

"ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே;
உலகனைத்தும் ஒன்றுமே;
அனறும இன்றும் ஒன்றுமே;
அறிந்தபின் தொடர்ந்தவே;
கன்றல் கின்ற செம்பொனைக்
களிபுறுத்து வாட்டினால்,
அனறு தெய்வம் உமிழ்ந்த
அறிந்தபின் சிவாயவே."

"எங்குமுள்ள ஈசனுக் கெம்முடல்
புகுந்தபின்
பங்குகூற பேசுவார் பாடுசென்று
அணுகிலார்;
எங்கள தெய்வம் உங்கள்தெய்வம்
எனறிரண்டு பேதமோ?
உங்கள் பேதமறிய உண்மைப்
பேதமிலலையே!"

"யாவர்க்குமாம் மிறையற் றொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொருவாயுறை
யாவர்க்குமாம் உண்ணுந்நீர்
தொருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்
னுரைதானீன"

"ஆகாவென்ன வரியதொன்றில்லை
ஆகமென்ன அறிகிலர் மாதர்
ஆகா வென்ன அமரருமாவர்
ஆகமவனை அறும்பிறப்பறுமே"

என்ற மெஞ்ஞானிகள் வாக்கை மனசிற கொளள வேண்டும். கட கர்மமே உலகம என்பதை உணர வேண்டும்.

"அபூதற்கரிய பிறவியைப்பெற்றும
பெறுதற்கரிய பரானந்தப் பேறும்
பெறுதற்கரிய பிராணாக ளெலலாம்
பெறுதற்கரிய பிறவியைப்பெறுந்தானீ"

"கங்காளன் பூசும் கயசத் திரு
நீறுமை
மங்காமற் சூடி மகிழ்வீர் யாமகிற
தங்கா வினைகளும், சாரும் சிவகதி
சங்காரமான நருவடி சீர்வீழி."

என்றதை நாங்களும் வாழ்க.

"நடுவுநின் றார்க்கு நாகமுமில்லை
நடுவுநின்றார் நலல தேவருமாவர்
நடுவுநின்றாரை நடுவுநின்றேனே"

திருவிரிஞ்சைமுருகன் பிள்ளைத் தமிழ்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

திருவிரிஞ்சை யென்பது வேலூருக்கு அருகிலுள்ள ஓர் வைப்புஸ்தலம். இது விரிஞ்சிபுரம் என வழங்கப்படுகின்றது. இத்தலத்திலுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு மாங்காய சகாயர் அல்லது வழித்துணை நாதர் என்று பெயர். அம்மையார் மரகதவல்லி; இங்கே கோயிலகொண்டுளள முருகப் பிரான்மீது வாகவி மார்க்க சகாய தேவர் எனனும் புலவராற் பாடப்பட்ட பிளளைத்தமிழ் மிகவுருக்கமான எளிய நடையில் அமைந்துளளது. முத்தக்குமாரசுவாமி பிளளைத் தமிழ் முதலியவற்றைப்போல கடின நடையில் அமைந்ததன்று. பாடலகள் படித்து இலபுறத்தக்கன. படிப்போரும் மனதைக் கவரக்கூடியது இப்பிளளைத்தமிழிலுளள ஒவ்வொரு பாடலும்மனபது முகமனனது. மாதிரிகைக்காகச் சில பாடலகளைத் தருகனறோம்:—

உருகா மனமுஞ சிவஞான முணரா
வறிவு மூனதுபுகழ்
ஓதாகரவு மீரதக கேட்டுவக்கே
யினியகதி போலப்
பெருகா விழிபு முடையேனைப் பிற
வக்கடலில வீழாமம
பேணி யெடுதகதிங் கெனதுளளம
பிரியா விரிஞ்சைப் பதிவாழும
முருகா வருக சுரர்மீக முதலவ
வருக வருகதிருமால்
மருகா வருக யிலமு மனனு
வருக குடியார்கள்
வாழ்வே வருக தெவசிகாமணியே
வருக வருகவே.

தீதிலபது மன்பாளர் பாவலவர்
லணடாம னீழலருஞ் சோலையே
யேயகாடு ஞாரியகருவகாடு
நீறழுவெழுக திபமே.
காதமாத வெணடாவரிருளாக
தோடகாட்டாமை யெழுபவணுவே
ஞாணியாக வணஞசான மீகாபலு
மடமகத்தஞனைகறையுமபாகமும
மேதினியி லுருதராரை மீழுதிறய
யனதீர மீவடியிற்றம்மீசாணிப்ப
மீதகியலகுல காலனுமையபிர
மீரதவீதவு சஞசீவிப்பே
ஆகயாமுச்சசஞ்சருளிவசாவ
யாடியருள் செயகையே
ஆறுழக முர்ச்சாருமே மொழிவி
லகாரவாபாடபருளசவகீரைபே.
பிபாடிய வுளத்தி லிருப்பாரைப்
பொலபுங்கப் பொருபபாரைப்
பொருபு கரிவை புரிப்பாரைப் புர
மூனறெரிய வெரிப்பாரைப
னையார் மகமான மழுவாரைக்க
லாலயன மால் தொழுவாரைக
னகசபைபல் நடிப்பாரைக் கங்கை
முடியின் முடிப்பாரை
மையார் மலரதை பொழிப்பாரை
மதவேழனைய விழிப்பாரை
மறலி கடுங்கப் பொருவாரை வழிக
ருள் தினைபா வருவாரை
ஆயவையர் வளுவகுமார ஆடி
யேறு சிறறில அழியேமில
ஆசை வருவரப் பதிவாழ்வி
டடி யடி சிறறிலழியேமில.

"கங்காளன் பூசும் கயசத் திரு
நீறுமை
மங்காமற் சூடி மகிழ்வீர் யாமகிற
தங்கா வினைகளும், சாரும் சிவகதி
சங்காரமான நருவடி சீர்வீழி."

என்றதை நாங்களும் வாழ்க.

"நடுவுநின் றார்க்கு நாகமுமில்லை
நடுவுநின்றார் நலல தேவருமாவர்
நடுவுநின்றாரை நடுவுநின்றேனே"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹு
கார்த்திகை உசுஉ திங்கட்கிழமை

உள்ளதைச்சொன்னால் உடம்பெல்லாப்புண்ணு?

சென்றவாரம் கூடிய இலங்கை அரசாங்கசபையில் சேர்ந்த மிணக்கும் சிங்களமந்திரிமார் இருவர் செய்யத் துணிந்த அடாத செயலும் எவராலும் வெறுக்கத் தக்கன; சிங்கள மந்திரிமாரும் சிங்களப் பிரதிநிதிகள் சிலரும் கொண்டநோக்கத்தையும் தமிழ்மக்கள் மீது அவர்கள் இயல்பாகப் பாராட்டும் துவேஷத்தையும் காட்டிக்கொடுப்பன. நடந்த செய்திகளேயென்றுமல்ல, அன்று கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில், களனியாப் பிரதிநிதியாகிய மிஸ்டர். S. W. R. D. பண்டாரநாயகனென்பவர் "சிலவாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற தமிழர் மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளேயும் தொடர்புடைய வேறு பலரையும் கொலைசெல்வதற்கான மோட்டார் பஸ், ரோட்டர் ரதம் என்னும் வசதிகள் பொருட்டு வசேஷமாக எண்ணெயுதவ வேண்டுமென்று மேற்படிமகாநாட்டுக்காரியதரிசி, முதல் தலைப்பாலனப் பகுதி மந்திரியாகிய மிஸ்டர். பண்டாரநாயகாவைக் கேட்க, அவர் மறுக்க, பின் மூன்றாங்காரிய தரிசி இலங்கை இராணுவத் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்ய, இராணுவத் தேசாதிபதி அந்த விண்ணப்பத்தையேற்று, தலைப்பாலனப் பகுதி பந்திரியன் கொள்கைக்கு மாறுக மீறி அதுமதி செய்த நியாயமென்ன" என னுங் கேள்வியைக் கடாவினர்.

அப்பொழுது தலைப்பான மந்திரியாகிய மிஸ்டர். பண்டாரநாயக எழுந்து எண்ணெயின் பொருட்டுத் தமிழ் மகாநாட்டுக் காரியதரிசி தமக்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்தைத் தாம் நன்கு ஆராய்ந்து பார்த்தபோதும், அப்படியான முயற்சிக்கு முன்னைக் காலத்தாயினும் எண்ணெயுதவும்படி தாம் அநுமதி செய்ததில்லையென்றும், இராணுவத் தேசாதிபதி தாம் தலையிடத் தகாத கருமத்தில் தலையிட்டுக் கொண்டாரென்றும் கருத்துப்படச் சமாதானங் கூறினர். அம்மந்திரி சொன்ன சமாதானத்தைக் கேட்டு, பருத்தித்துறைப் பதிதிப் பிரதிநிதியாகிய திரு. G. G. பொன்னம்பலமவர்கள் எழுந்து, பலாங்கொடைப் பகுதித் தேர்தல் நடந்த காலத்திலும், 'காலிங்' எனப்படும் யானை அகப்படுத்தங்காட்சி நடந்தபோதும்மார்மலாத்தேர்தற்போதும் கணக்கிறந்தஸ்களும் மோட்டரதங்களும்ஆட்களையேற்றிக்கொண்டு விசேஷமாகப் பலமுறைபோக்குவரவுசெய்தனவே, அந்த டஸ்ஜூரதங்களுக்கு எண்ணெயனுமதிகப்படவில்லையோ, அவைகள் எண்ணெயின்றி வேறு வகைகளாக ஓடினவோ என்று ஆட்சேபத்தார். இப்படித திரு. பொன்னம்பலமவர்கள் ஆட்சேபஞ்செய்தபோது தலைபரிபாலன மந்திரியாகிய மிஸ்டர். பண்டாரநாயகாவுக்கும், அரசாங்கசபை மூப்பரென்றுக்கும் மிஸ்டர். சனநாயகாவுக்கும் ஆத்திரமும் கோபமும் டபடப்பும் துடிதுடிப்பும் ஏககாலத்திற் பிறந்தனவாம். திரு. பொன்னம்பலமவர்கள் நிகழ்த்திய ஆட்சேபத்திற்குச் சமாதானஞ் சொல்ல ஆற்றலுவர்களாய்க் கூட்டத்தில் யாதும் பேசமுடியாதவர்களாய்க் கூட்டத்தைத் தவணையிட்டபின் வாசலிலும் மண்டபத்தின் புறத்திலும் நின்று திரு. பொன்னம்பலத்தின்மீது துஷ்ணையாரி பொழியத் தொடங்கினர்களாம். சொல்லாத வார்த்தை சிலசொல்லிச் 'சாதி சொல்லாலறியலாம்" என்பதைத் திருஷ்டாந்தப்படுத்தினர்களாம். திரு பொன்னம்பலமவர்களே அவர்கள் எசிய ஏச்சுப் பத்திரிகையில் வெளியிடத்தகாத அசங்கதமானவையெனக் கொழும்பில் வெளியாகும் ஆங்கிலதினசரியொன்று தெரிவித்துள்ளது; இந்த இலங்கை மந்திரிமார் இருவரும் ஏச்சளவில் மாத்திரம் நின்றுவிடவில்லையாம்; தமிழ்ப்பிரதிநிதிகளைத் தாக்கவும் முயன்றனராம். எதிர்ப்பவன் ஏழையானும் கோபஞ் சண்டாளம் என்பது பழமொழி; ஆனால் திரு. பொன்னம்பலமவர்கள விஷயத்திலே இவர்கள் சீற்றம் செல்லாவிடத்துச் சிலமாய் முடிந்தது. பேச்சளவில் மாத்திரமல்லாமல் ஏச்சு விஷயத்திலும் தாக்குதல் விஷயத்திலும் திரு. பொன்னம்பலமவர்களும் இவர்களுக்குப் பிரதி சம்மானஞ் செய்ய வல்லவர்; ஆனல் இந்த மந்திரிமாரைப்போல் தாமும் செய்யப் புகின் தமக்குமாத்திரமல்லாமல் தமிழ்மக்களனைவருக்கும் கையாகுமென் றெண்ணி வாளாவிருந்தனரென்றே சொல்ல வேண்டும்

இவ்விஷயம் இவ்வளவிலிருக்க, இந்த சிகழ்ச்சி 'ரயிம்ஸ்" 'வீரகேசரி' யென்னும் கொழும்புத் தினசரிகளில் வெளிவந்தனவேயன்றி, இற்றைவரையில், கொழும்புப் பட்டினத்திலே சிங்கள சமூதாயத்தாரால் நடத்தப்படும் 'அப்சர்வர்' 'டெயிலிநியூஸ்' தினகரன் முதலிய பத்திரிகைகளில் வெளிவரக் கண்டிலமே; காரணமென்ன! ஊரை உலைமூடி கொண்டு மூடிவிடலாமெனறு அப்பத்திரிகைகளனைபொறுப்பாளிகள் நினைத்தமைபோலுப்?

மேலும் இன்னுமொருவிஷயம் ஆராயத்தக்கதுமாம்; சமீபத்த வெறுப்பான நிகழ்ச்சி அரசாங்கசபைக்கூட்டத்திலே தொடர்புடையதாகவிருப்பதும், அடுத்த நாட் கூட்டத்தில் இதனைப்பற்றி சிங்களப் பிரதிநிதிகளுள் எவராக, ஏனைய தமிழ்ப்பிரதிநிதிகளுள் எவராகயாதும் பேசாது குறித்த மந்திரிமாரின் அகிரமத்தை யெடுத்துக் காட்டிக் கண்டித்தலின்றி மௌனஞ் சாதித்தல் யாதுபற்றியோ என்பதும் புலப்படவில்லை. இங்கிலாந்திலிருந்து அரசியல் விசாரணைச் சபையார் இங்கு வருதற்கு உத்தேசித்துள்ள இந்த நேரத்தில் சிங்களர் தமிழருடன் பிணைகுவது நன்மைக்கோ தீமைக்கோ நாமறியேம்.

கிரேக்க நாட்டில் உண்ணாட்டுக் குழப்பம்

ஐக்கிய ராச்சியத்தினாற்பகை வரிடமிருந்து முதன்முதல் விடுவிக்கப்பட்டநாடு கிரேக்க நாடெனச் சொல்லுதல் மிகையாகாது. இப்படி விடுதலையாக்கப்பட்டதன் கிரேக்காட்டின் பரிபாலனத்தைப் பற்றிய அபிப்பிராயம் இருளிதமாகப் பேதப்படலாயிற்று; ஒரு கட்சியார் பிரசாதிபதி ஆட்சியமே வேண்டுமென்று வாதிக்க, மற்றைக் கட்சியார் ஒரு அசனலும் முறையே வேண்டுமெனச் சாதிக்கலாயினர். இந்த அபிப்பிராயபேதம் காரணமாக ஒரேநாட்டு மக்களே இருபிரிவாகக் கலகஞ்செய்து ஆயுதபாணிகளாய்ச் சண்டைசெய்யத் தலைப்பட்டனர். இப்படியான கலகத்தை தொடர்ந்தடக்கவந்த பிரித்தானிய மந்திரியாகிய மன்னர். சேர்ஜில ஆங்கிலோ பிரித்தானிய படைகளைக்கொண்டு அகிலகத்தையடக்கிச் சமாதான நிலை ஆக்க முயற்சி செய்கிலராயினர். லேர்ஜில கைகொண்டமுறையிலுச் சிலர் அவரைக் குறைகூற முற்பட்டனர்; பிரித்தானியர் டோராமுமன்றத்தை தொழிலாளர் பிரதிநிதிகளுட் சிலரும் பிரித்தானிய பிரதம மந்திரியின் செயலையடக்கணத்தனர்; ஆனால் பாராளுமன்றத்தினருடைய தொகையினர் மிஸ்டர். சேர்ஜில் போகுதலை அங்கீகரித்து அவர் செயலை நிறைவேற்றினர்.

விஷயம் இப்படியாகவும், கிரேக்க நாட்டிலே இப்போது கலகம் அதிகரிக்கத் தலைப்பட்டுள்ளதாகவும் அதனால் ஏதென்ஸ் நகரிலுள்ள 900 பேர்களைவிடப் பிரித்தானிய போர்வீரர்களாற் பிடித்துப் பிருத்தானிய மந்திரியின் அங்கீகாரம் பெற்ற கிரேக்க அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டனராம்; கிரேக்கநாள் எதிர்க்கட்சியார் பிருத்தானிய போர்வீரர்களையும் தங்கள் எதிர்க்கட்சிக்காரியவர்களையும் தாக்கத் தலைப்பட்டுக்கொண்டனராம்; பலரைச் சிறையாகப் பிடித்துள்ளனராம். இதற்கிடையில் அங்கேயுள்ள ஒரு ஜர்மனிய ஆகாணுவ சேனாதிபதி எதிர்க்கட்சியாருக்குத் துணையாக, பிருத்தானிய வீரர்களையும் அவர்கள் பக்கத்துக் கிரேக்கரையும் தாக்குகின்றனராம்; அவர்களுட் பலர் சுடுபட்டுப் பிடித்துக் கொல்லப்பட்டனராம். இதுவரையில் கொலைலப்பட்டோர் தொகை 80 வரையிலிருக்குமென மதிக்கப்படுகின்றது. பிருத்தானியர் தக்க பெலங்கொண்டு அடக்கத் தொடங்கினால் அடக்கிவிடலாமென்று எண்ணப்படுகின்றது.

வாழ்க்கையும் விஞ்ஞானமும்

ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B. A., B. L.

மயிலைத் தமிழ்ச்சங்கத்திற் செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது

உலகவாழ்க்கைச் சரிதத்தை நமது பழங்காலப் புராணங்கள் கிருதயுகம், திரேதாயுகம், துவாபாயுகம், கலியுகம் என்னும் நான்கு பெரிய யுகங்களாக வகுத்திருக்கின்றன. சத்தியம் தர்மம் முதலிய அறநெறிகளே அளவுகோலாக அமைத்துக்கொண்டு செய்யப்பட்ட பாகுபாடு இது. இவ்வரிசை அறிவை அளவுகோலாக அமைத்துக் கொண்டு, நாமும் உலக வாழ்க்கைச் சரிதத்தை மூன்று பெரிய யுகங்களாக ஒருவாறு பிரிக்கலாம். அஞ்ஞானயுகம், அபிப்பிராயயுகம், விஞ்ஞானயுகம எனபனவாம் இம் மூன்று பிரிவுகள்.

மிகமிகப் பழங்காலத்திலேவாழ்ந்த மனிதர்கள் அனைவரும் தொடக்கமுதல் எல்லா வகைகளிலும் கம்மை காட்டிலும் மேம்பட்டவர்கள், அவர்களை அறிவில் மிகுந்தவர்கள்; நீண்ட ஆயுளுடையவர்கள்; நோய் அற்றவர்கள்; பொய்யும் குறும் களவுமிலாதவர்கள்; பகைநீங்கி பிவர்கள்; மதவதனமை பெருகுபவர்கள். அவர்கள் அறியாதன இல்லை; அவ்வாறு யாதாயினும் இருக்குமாயினும் அது அறியத்தக்கதன்று கீழ்மக்களுக்கு மகோன்னத நிலையிலே அவர்கள் வாழ்ந்தார்கள். காலஞ் செல்லச் செல்ல, நாம் படிப்படியாகத் தாழ்மையற்று, நாகரிகத்திலும் கலைகளிலும் குன்றிக் குறைவுபட்டு வருகிறோம். இப்போதுகாகக் கணியின் கீழ்ப்படிக்கும் கீழ்நிறுவி, மிகவும் இழிவான நிலைபை அடைந்துவிட்டோம். இந்த நிலையிற் தெய்வத்தை நினைவுகூறுவதும் நாம் சிருஷ்டிகர்த்தரை முழுமனதுடன் அறிந்து போற்றுவோம்' என்பதிலும் பொருளை அபிப்பிராயம். விஞ்ஞான ஆராய்ச்சியாளர் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை. பெரும்பாலும் இதற்கு நேர்மாறான அபிப்பிராயத்தையே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம்.

இவ்வுலகம் தோன்றிய காலத்திலே இதில் உயிர் எப்படித் தோன்றியது, பிறகு வெகுகாலத்துக்கு முன்பு, எடுத்தியோசெல்லாதோ என்னும் உயிர் தோன்றியது, முதன்முதலில் தோன்றிய உயிர் சிறந்த உயிரினத்தைச் சார்ந்ததா, அது மிகவும் அற்பமானதா, ஒரே ஒரு கண்ணையுடையதாயும் பிறவும் அற்பமாய் வாழ்வதாயும் உள்ள ஒரு சிறுபூச்சியா அது, பிறகு யுகயுகனகளாகச் செல்லச் செல்ல, இவ்வுலகத்திலுள்ள சகலபிராணிகளும் இவ்வுலகத்தின் தன்மைகளாலும் சீதோஷ்ணநிலை முதலியவற்றாலும் அவ்வப்போது சிறிது சிறிதாக மாறுதலடைந்தும், வளர்ச்சி இன்மையாலும் இவ்வாறு பலவகைப்பட்ட பலகோடி ஜீவராசிகளும் மண்ணுமாயும் பரிணமித்து வந்த அற்புதமான உபிரான்ம பலவேறு விதவகைப்பட்டும், பல வகைபான நாவரவகைகளும் ஐந்தாம பிராணிகளாகவும் உருவங் கொண்டதும், இப்படித் தோன்றிய வகைகளுள் ஒன்றான மனிதன் பெற்றுள்ள வடிவம், இவ்வடிவத்தைப் பெறுமபினனும், மனிதன் எனபபடும் பிராணியின் உடலில், உள்ளும் புறமும், சிற்சில மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இவை யாவற்றையும்மன் இவை நல்லவையென்றும் தீயவை யென்றேனும் நீபகவையென்றேனும் சொல்லுதற்கில்லை. முதன்முதலில் தோன்றி வாழ்ந்த மனிதருக்கும் நமக்கும் சிறிதளவு அறிவு அளவில் எதனாலும் உயர்வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆதிமனிதரினிடமும் நம் உடலிலுமிலை நாம் குறைந்தவர்களா. ஆனால் அறிவு-முதலியவற்றில் - மிகுந்தவர்கள் என்று பொதுவாகச் சொல்லலாம்.

பிரபிப் பழங்காலத்தில் வாழ்ந்தவர்கள் தங்கள் எண்ணங்களால் சாதகரணத்தில், காதுகளால் சாதகக் கேட்கவில்லை. இயற்கை நிகழ்ச்சிகளை அவர் செயலவயாக அறிந்துகொள்ளவில்லை. உடல் சிலிர்க்கும் பனிக்காலமும், மணலகளும் இளவேனிற்காலமும், கனி பழுக்கும் சரியும் முதுவேனிற் காலமும், நிலம் குளிர்ந்து செழுமையற்ற மழைபொழியும் மாரிக் காலமும் ஒன்றைபின்னொன்று அடுத்து வரும் ஒழுங்கையுடன் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. சுகமாக வாழ்வதற்குரிய வீடுகளும் பயன்மிக்க வழியறிபாதவர்களாக இருந்தனர் என்பதுமறை யும் நிற்பாதவர்களாகவும் குகைகளி லுமரஞ்சோலைகளிலும் வாழ்ந்தனர்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

சந்தோஷ சமாசாரம்

ஜனவரிமீ 1உ தொடக்கம் இருமடங்கு அரிசி உதவப்படும்

ஊர்ப்பாதுகாப்பாளரும் உணவுக் கட்டுப்பாட்டுத் தலைமை யதிகாரியுமாகிய ஸேர். ஒலிவர் குணத்திலக அவர்கள், 1945-ம் ஆண்டு ஜனவரி மீ 1-ம் தேதி தொடக்கம், கூப்பன் கணக்கில் இப்பொழுது உதவப்படும் அரிசிபைக்காட்டிலும் இரண்டு மடங்கு அரிசி (1 படியரிசி) உதவப்படுமெனத் தெரிவிக்கின்றார். இந்த நற்செய்தி, சோறாக நெல்லையும் அரிசியையும் அதிபாய விலைக்கு விற்கும் இரக்கமற்ற உலோபிகளை யொழிந்த ஏனை யமக்களெல்லார்க்கும் மகிழ்ந்ததைத தருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகவியோகம்

திரு. சோமசுந்தர உபாத்தியாயர்

காலஞ் சென்ற திரு. சோமசுந்தர உபாத்தியாயர் என்னும் சீனி உபாத்தியாயர் என்னும் திருஞானசம்பந்தப் புலவருடைய புதல்வரும், யாழ்ப்பாணத்தைத் திருகோணேசுவரத்தையை ஜென்ம ஊராக உடையவரும், பிற்காலத்திலே உடுவிலம்பதியை வாசஸ்தானமாகக் கொண்டவரும், இற்றைக்கு ஏறக்குறைய 25 வருஷத்திற்கு முன்பு கடந்த சண்முகானந்த பத்திரிகைக்குச் சிலவருஷம் ஆசிரியராயிருந்தவரும், ஸ்ரீராமகிருஷ்ணானந்த கல்லூரியிலே அதி ஆரம்ப பிரதானராள் முதலாகத் தரம் இரண்டு பாரும் வரையிலே அதன் தமிழ்ப் பண்டிதராய் லொருவருமாய்ச் சமீப காலம் உபாத்தியாயராயிருந்தவரும், இலக்கியங்களை ஆராய்ந்து கலாரசிகர்களுடன் தொடர்பைக் கைவிடாமல் ஆகாகே தினகரீதாரும் சென்னை தேவாரம் பயிற்றுவித்தவரும் ஆயிருந்த சோமசுந்தர உபாத்தியாயர் சில மாதங்களாக நோயினால் பீடிக்கப்பட்டிருந்து, தமது 75ம் வயதிலே (5-12-44ல்) சரீரம் நீத்தார். அன்னாரது பூதவுடல் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை மதியகாலத்தில் சிவபதம் அடைந்தார்.

இவர் பண்ணிசை தேவாரம் பாடுவதில் சிறந்தவர். பூராணபாரதியன இனிமையாகப் படித்துப் பாடல் சொல்லும் திறமை யுடையவர்; சொற்சுவை பொருட்சுவை மிகுந்த பிரசங்கங்களை செய்வதிலும், கட்டுரை கவிதை நூல்களை ஆராய்ந்து ஆராய்ச்சி செய்வதிலும் மிகுந்த ஆற்றல் உடையவர். இவரோடு நெருங்கிப் பழகுவோர் இலக்கிய சுவை ததும்பிய சம்பாஷணையை பெரிதும் விரும்புவர். மிகவும் பழைய சம்பிரதாயங்களை நீங்கள் கைக்கொண்டு ஆடம்பரமில்லாமல் வாழ்ந்தவர். பெரும்பாலும் தினமும் இவரது வீட்டில் கைகூடி ஆலோசனை செய்து அறிவுரை நல்கி ஆலயங்களை மேற்பார்வை செய்து வந்தார். சமீப காலத்தில் ஆறுமுக நாவலர் சரித்திரம் சைவ வினாவிடை முதலிய நூல்களை ஆராய்ந்து கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பெரிதும் உதவி புரிந்தார். சைவ சமய பாடசாலைகளில் தமது மாணாக்கரை ஊக்கமுடன் பயிற்றுவித்து வந்தார். சைவ சமய சம்பந்தமான முறையிலும் வழக்கிலும் தேர்ந்தவர்களிலும், சைவ சமய பிரசங்கிகளிலும் சிலர் பாடியுள்ளார்.

இவரது மாணவியாரும் மக்கள் நால்வருள்ளே சரவணபவன், அமுதவல்லி, முருகையா என்னும் மூவரும் ஜீவித்தாயிருக்கின்றனர். மயான பூமியை இவரது இல்லத்தை விடுத்து நடந்தேறியது. இவர் ஆன்மா சாந்தி அடைக.

இப்பெரியாரது இழப்பிலே, இவரது சிஷ்ட புதல்வர்களாகிய திரு. சரவணபவனவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு தானமாகவளித்துதவிய ரூபா 3 பெறுமதி.

தேவை

ஊரெழு ஐக்கியசங்கக் கடைக்கு ஒரு மனேஜரும் ஒரு விற்பனவு காரனும் தேவை; மனேஜருக்கு மாதவேதனம் 50 ரூபா; விற்பனவுகாரனுக்கு மாசவேதனம் 25 ரூபா; மனேஜர் பணப்பிணை 300 ரூபாவும், விற்பனவு காரன் 100 ரூபாவும் கட்டவேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் வருகிற ஜனவரிமாசம் 1-ம் தேதிக்கிடையில் எமக்குச் சேரவேண்டும்.

காரியதரிசி
ஊரெழு ஐக்கிய சங்கம்

Mis 168, 7&11-12-44 சுன்னாகம்.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

செவ்வாய் டிசம்பர் 12

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 எஸ் வி சுப்பையா பாகவதர் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் அலமேலு பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஹி ஆர் ரங்காதன்புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 டி ஜீ சங்கரகோபாலன் புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 நிருவெங்காடு சுப்ரமணிய ஐயர் காகல் வரம் † 6-15 இலக்கியவாசகம் 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-50 கிராமஸ்தர்சேன் 7.15 தானவாத்யக்கச்சேரி 7-50 அறிவிப்புகள் 7.55 திரைகானம் † 7.45 தமிழில் செய்திகள் 8 டான்சு இசை † 8-10 புத்தகவிமர்சனம் 9.30 டி சிசகாகோபாலன் புல்லாங்குழல் 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-50 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இந்தியாவின் எதிர்கால அரசியல் விமர்சனம் 10 ஹோப்பியசங்கீதம் 10-0 முடிவு.

வியாழன் டிசம்பர் 14

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருப்புகழ் மணி † 8-15 ஆங்கிலத்தில செய்திகள் 8-30 ஆர் வி சுப்பிரமணியன்வீணை 9 முடிவு.

1 டான்சுமெட்டுகள் † 1-10 ஆங்கிலத்தில செய்திகள் 1-40 காச்சியார்கோவில் பிரகலாத மிஸ்ரபாட்டு 2 தமிழில செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஆர் வி சுப்பிரமணியன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 காச்சியார் கோவில் பிரகலாதவரதன் பாட்டு 6-50 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம சேழச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7.35 வாலெலி வாத்யகோஷ்டி 7-45 தமிழில்செய்திகள் 8 சொல்கர்கான் சிறுகதை 8-15 டி எஸ் பகவதி பாட்டு 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 யுத்த தளவாடங்கள் ஆங்கிலப் பேச்சு 0 இசைவேள்வி 10 0 முடிவு.

இலவசப்பால்விநியோகம்

இலவசப் பால் விநியோகம் செய்யப்படும்வதாபனமொன்றை சென்ற மாசம் உடுவிற் கிராமச் சங்க உதவி அக்கிராசனர் ஸ்ரீமான் வ. செல்வத்துரை அவர்கள் கற்பக விநாயகர் தினத்தன்று வைத்தார். அந்த நிருணம் அநேகம் பிள்ளைகளுக்கு அவர்களுடைய பெற்றோர்களைவிட அதிகமாகவே முகமலர்ந்திருந்தார்கள். அப்பாவுக்கு உதவி அக்கிராசனர் ஆகவும் பெற்றோர் ஏழாம் பிள்ளைக்குக்கும் மற்றபடி ஸ்தாபனத்தால் ஏற்படும் காலைக்கோப்பைக்கு ஓர் சிறு பொருளை செய்து, ஆரம்பத்தில் ஓர் சிறு பிள்ளைக்கு பாலை வழங்கினார். பின்பு காரியதரிசி அவர்களும் பற்றைபபிள்ளைகளுக்கும் பால் விநியோகம் செய்தார். இப்போழுது அவ்விடத்தில் ஏறக்குறைய 200 பிள்ளைகளுக்குப் பாலும் வழங்கப்பட்டு வருகிறது. கடிதம்

நட்பு

திருமயிலை செல்வி
ஜ. உலோகசுந்தரி

ஒருவருடைய மனசும், இன்னொருவருடைய மனசும், அறிவும் ஆற்றலும், மற்றைக் குணங்களும் ஒத்திருத்தலே நட்பாம். நாம் எல்லோரிடத்திலும் நட்புக்கொள்ள முடியாது. நட்பிலும் கூடாநட்பு, தீயநட்பு, கண்ணட்பு என மூன்று வகைப்படும். கூடாநட்பினால் செய்கையானது ஒருவருக்கு உறவினராக இல்லாவிடினும், உறவினர்போலவே நடித்துப் பிறகு திடீரென்று மாறுபடும் தன்மையதாம். அவர்கள் வெளித்தோற்றத்தில் முகமலர்ந்து சுகத்துப் பேசிக் கொண்டிருந்தாலும் அவர்கள் மனமானது எதாவது வஞ்சகத்திற்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கும். தீயநட்பினர் நடமோடு கூடிய வரையும் நீயவராக்கவிடும் ஆற்றலுடையவர். அவர்கள் நட்பானது பெருகுவதைவிடக் குன்றிவிடுவது நன்மைதானும் திருவள்ளுவர் ஐயர் கூறியுள்ளார். "பகுதுவர் போலினும் பண்பிலார் கேண்மை பெருகுதலிற் குன்றலினிது". இங்ஙனமிருக்க நீயவர் சகவாசம் எவ்வளவு நீங்கையுடையது என்று தெரிகிறது அன்றோ? இத்தகைய தீயவர்களின் நட்பைவிட கலவியாகளின் பகைமை நன்றுமென்று இவ்விரண்டு நட்பினரும் கூறினர். கல்லவர்களுடைய சகவாசத்தை விரும்பாதவர்களாகிய மாந்தர் மீவிருளுமலல. நல்லவர்களுடைய நட்பானது முன் சிறிதளவிலே இருந்து பிறகு பெருகுமானையுடையது. உதாரம் நண்பர்களுக்கும் சிநேகருக்கும் எதிரிலை நன்பம் மீரிலும் உடனும் முன்னே அவர்களுக்கு உதவி செய்யலே நமது கடமையாகக் கொள்ளவும். அனுபவமுடையோரும்,

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாகே
யிடுக்கண் களைவதா நட்பு"

என்று கூறியுள்ளார்.

இதன்படி ஆடை குலைந்தவனுக்குக்கை எப்படி உதவுகிறதோ அப்படியே ஆபத்தை அடைந்தவனுக்கு அவனைபறியாமலே உற்ற நண்பன் உதவி செய்து துன்பம் ஒழிப்பான். உண்மை நண்பன் தான் சினேகிதனுக்கு ஆபத்தான சமயங்களில் தன் உபிரைக்கொடுத்தும் காப்பாற்றுவான். அவனுடன் தானும் இன்பம் அனுபவிக்கும் போது இன்பமும், துன்பம் அனுபவிக்கும்போது துன்பமும் அனுபவிப்பான். இப்படி அவர்கள் செலுத்தும் நட்பான ஒரு மரத்தின் அருகிலுள்ள ஓர் பூங்காடி அம்மரத்தினமீது படர்ந்து, செழித்து, பூத்தித்து வாருமாபோல், அமமரம் பெருகுகாற்றினால் பற்றிக்கப்படும்போது தானும் அதனுடனே வீழ்ந்து வாடுதல் நிகர்க்கும்.

கவர்களின் செய்கையானது அகொடி நன்றாய் வார்த்து புஷ்டித்து இருந்த காலத்தில், அப்பூக்களில்உள்ள சீதங்களை குடித்து, மதுவுந்து இருந்தாலும், அகொடி மரத்துடனே வீழ்ந்து வாடும்போது அதைவிட்டு வேறோர் இடத்தை நாடிச் செலலும் வலுவான செய்கையை யுடையதும். அஃதாவது ஒருவன் மனமும் செயலுந்தனுப்புந்தும்போது அவனுடன் பலர் நட்புக் கொண்டு அவனுடனேயே இருப்பார்கள். அவனுக்காகத்தம உபிரையும் கொடுப்பதற்கச் சொல்லுவார்கள். ஆனால் அவனையில் உள்ளபொருள் வறுமையிறகு அவனுடன் கூடவாக இருந்தவர்களெல்லோரும், துன்பம் வந்தபோது கூடவந்த காரணம் தெரிவுமாறு பட்டு அவனைவிட்டு வேகமாய்ப் பார்கள் துயரமான கவர்களின் செயலை

"காலாடு மோழிங்கி கழிகிளைநீர் வாணிதது
மேலாடு மீனிற் பரராவர்—ஏலா
இடாமுடுவர் உற்றகால,
ஓடுகுனறு மாடா
தொடாபுடைபெயரும் என்பர்
சலா."

என்ற ஒரு பெரியாரது மொழி நினைப்பதற்கிணறன.

ஆகையால் ஒருவருடன் நட்புக் கொளளுமபோது அவர் மூன்று வகை நட்பினருள் எந்தவகை நட்பினர் எனறு நன்றாராய்ந்து பார்க்க வேண்டும்.

மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் "சரந்தன் றக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றுகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின் "சரந்தன் றக்ஷா" கற்பஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கற்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் குறைவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கலப்பையும் பல நோய்களையும் கற்பப் பையில் புகுந்து அகனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டாகாமல் பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மாதரின் கற்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். தூற்றுக் கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால் அன்டு சன்ஸ். கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்டரி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புக்கெதரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல இம்போரட்கம்பெனி
28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க;
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietorss the Hindu Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 11, December, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org